பொது சுற்று நிருபக் கடித இலக்கம் - 02-186/2013

எனது இலக்கம்:- சிஎப்/ஈஎக்ஸ்ஈ/10/2013
சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய",
385, பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு – 10
2013.12...29. ஆம் திகதி

மாகாண சுகாதார செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு பொறுப்புத் தலைவர்கள்,
மத்திய அமைச்சின் கீழுள்ள சகல வைத்தியசாலைப்
பணிப்பாளர்களுக்கும் நிறுவனத் தலைவர்களுக்கும்.

## பௌதிக சிகிச்சையாளர் 11ஆம் வகுப்பு 'அ' பிரிவின் / தரம் II ற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சையும் , திணைக்களப் பரீட்சையும் - 2011

பௌதிக சிகிச்சையாளர் 11ஆம் வகுப்பு 'அ' பிரிவின் / தரம் II உத்தியோகத்தர்களுக்கு அனுமதிக்கப்பட்ட சம்பளத் திட்டத்தின் நான்காம் சம்பளப் படிமுறையை எய்துவதற்கு முன்பு தேர்ச்சியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 2014.02.15 ஆம் திகதியும் திணைக்களப் பரீட்சை 2014.02.16 ஆம் திகதியும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளினாலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடம், நேரம் என்பன பிரவேசப் பத்திரத்தில் குறிப்பிடப்படும். (விடயம் தொடர்பான வினாப்பத்திரம் ஆங்கில மொழியில் மாத்திரம் வழங்கப்படும்.)

**02. தகைமைகள் :-**

- பௌதிக சிகிச்சையாளர் உத்தியோகத்தர் சேவையின் வகுப்பு II அ பிரிவிற்கு / தரம் II ற்கு நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர்கள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்.
- பௌதிக சிகிச்சையாளர் உத்தியோகத்தர் சேவையின் வகுப்பு II ஆ பிரிவிற்கான / தரம் III ன் வினைத்திறமை, திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்து உரிய சேவைக்காலத்தைப் (06 வருடங்கள்) பூர்த்தி செய்துள்ள திணைக்களத்தின் தாமதத்தினால் வகுப்பு II அ பிரிவிற்கு / தரம் II ற்கு நியமிக்கப்படாத உத்தியோகத்தர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்

**03. விண்ணப்பங்கள் :-**

விண்ணப்பங்கள் இச் சுற்றுநிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரின் மூலம் கொழும்பு 10, இல.385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, சுவசிரிபாய கட்டிடத்தின் பணிப்பாளர் (பரீட்சையின் பிரிவு) க்கு 2014.01.14 ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். சகல விண்ணப்பங்களிலும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் பிழையற்றவைகளெனப் பிரிவுத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ரூபா 30.00 முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றும் ரூபா 5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9"x4" அளவுள்ள கடித உறைஒன்றினையும் இணைத்து அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய படி அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதவும்). தாமதமாகிப் பெறப்படும் விண்ணப்பங்களும், பூரணமாகாத, தவறான விண்ணப்பங்களும்' ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**கவனிக்கவும் :** மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் **A4** தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகத்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 05 - 08 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

04. பரீட்சைக் கட்டணம் :-

1. பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு விடயத்திற்கு ரூபா 25/- வீதம் வலுவிலுள்ள முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை மதிப்பு நீக்கம் செய்தல் வேண்டும்.

11. எக்காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ மீளச் செலுத்துவதோ புரியப்படமாட்டாது.

05. பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்தல் :-

1. ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரர்களுக்கு பிரவேசப்பத்திரங்கள் வழங்கப்படும். அப்பிரவேசப் பத்திரங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது.

11. பரீட்சை விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது அடையாளத்தை நிருபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களுள் ஒன்றை சமா்ப்பித்தல் வேண்டும்.

(அ). தேசிய அடையாள அட்டை
(ஆ). திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ). சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ). கடவுச்சீட்டு

06. பரீட்சைத்திட்டம் :-

இப் பரீட்சை திணைக்களப் பரீட்சை , வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. திணைக்களப்பரீட்சை எழுத்து, பிரயோகம், வாய்மொழி எனும் மூன்று பிரிவுகளை கொண்டது. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை அலுவலக நிர்வாகமும் தாபனவிதிக்கோவையும் , நிதிப்பிரமாணங்கள் எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் பொருட்டும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன்பொருட்டு ஒவ்வொரு பகுதியிற்கும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக்கொள்ள முடியும். **முதன்முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பிரிவுகளிற்கும் விண்ணப்பிக்கவேண்டும்.**

07. பரீட்சைப் பாடத்திட்டம் :-

07.1. திணைக்களப் பரீட்சை

07.1.1 விடயம் தொடர்பான வினாப்பத்திரம்.

பல்தேர்வு, கட்டுரை நடையிலான இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டுள்ளது. பல்தேர்வு வினாப்பத்திரத்தின் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும் நேரம் 01 மணித்தியாலம். கட்டுரைநடையிலான வினாப்பத்திரத்தில் ஏழு வினைக்களில் நான்கு வினாக்களுக்கு விடைஎழுத வேண்டும். நேரம் 02 மணித்தியாலம். இவ்விடயத்தில் தேர்ச்சியடைவதன் பொருட்டு விண்ணப்பதாரர்களினால் பல்தேர்வு, கட்டுரை ஆகிய இரு பிரிவுகளினதும் கூட்டுத்தொகை குறைந்தது 40 % பெற்றுக்கொள்ள வேண்டும்.

பாடத்திட்டம் :-

(அ). 1. வாத நோய்
11. இருதய நுரையீரல் நோய்.
111. சுவாச நோய்கள்.
iv. அங்கவீன நோய்கள்.

(ஆ). பௌதிக சிகிச்சைப் பிரிவொன்றை அல்லது கூறொன்றை ஒழுங்கமைத்தல்

(இ). பொருட்களின் அட்டவணையொன்றைப் பேணுதல்.

(ஈ). பொருட்களைக் கோறுதல்.

(உ). உபகரணங்களைப் பேணுதலும் புதுப்பித்தலும்.

7.1.2 பிரயோகப் பரீட்சை -

விடயப்பரப்பிற்கு ஏற்புடையனவான இயலுமைகள், செயலாற்றங்களையும் கொண்ட பிரயோக பரீட்சையாகும் மொத்தப் புள்ளிகள் - 100

7.1.3. வாய்மொழிப் பரீட்சை –

விடயப்பரப்பிற்கு ஏற்புடையதும் சேவையில் ஈடுபடும்பொழுது ஏதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான பரீட்சையாகும். ஆகும். மொத்தப்புள்ளிகள் 100.

**7.2 வினைத்திறமை காண் தடைப் பரீட்சை**

**இப்பரீட்சை அலுவலக நிர்வாகமும், தாபன விதிக்சோவையும் , நிதிப்பிரமாணம் எனும் இரண்டு வினாத்தாள்களை கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 100 புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.**

**7.2.1. அலுவலக நிர்வாகமும் , தாபன விதிக்கோவையும் ( 02 மணித்தியாலம்)**
**ஏழு வினாக்களளில் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும். தாபன விதிக்கோவையின் கீழ் வரும் அத்தியாயங்களிலிருந்து வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.**

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | XV | கல்வி , பயிற்சி அல்லது கடமை நிமித்தம் வெளி நாட்டிற்குச் செல்லுதல் |
| அத்தியாயம் | XVI | விடுமுறைப் பயணம் (Holyday Travel ) |
| அத்தியாயம் | XXIII | விசேட வகையான நோய்கள் காரணமாக அல்லலப்படும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் நிபந்நதனைகள். |
| அத்தியாயம் | XXIV | சம்பளக் கடன் / முற்பணங்கள் |
| அத்தியாயம் | XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் | XXVII | தொடர்பாடல் முறைகள் |
| அத்தியாயம் | XXVIII | நிர்வாக நடைமுறைகள் |
| அத்தியாயம் | XXX | அரசாங்க ஊழியர்கள் மீதான அரசாங்கத்தின் உரிமைகள் |
| அத்தியாயம் | XXXIII | சட்ட ஆலோசளைனகளும் , சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் | XLVII | பொது நடத்தையும் , ஒழுக்கமும் |
| அத்தியாயம் | XLVIII | ஒழுக்காற்று நடைமுறை |

7.2.2 நிதிப் பிரமாணங்கள் (02 மணித்தியாலங்கள் )

ஏழு வினாக்களளில் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும். நிதிப்பிமாணத்தின் கீழ் வரும் அத்தியாயங்களிலிருந்து வினாப்பத்திரம் தயாரிக்கப்படும்.

| | |
|---|---|
| அத்தியாயம் VI - | பொது நிதியினைப் பராமரித்தல் / பாதுகாத்தல் (Custody) முதலியன காசு கட்டு நிதி மற்றும் வங்கிக்கணக்குகள் / பொதுநிதியின் பிணை / முறி , பொருட்களை கணக்கெடுத்தல் (Board of Survey) வங்கிப்பற்று , வங்கிக் கணக்குகள ( நிதிப்பிரமாணங்கள் 315 - 396 ) |
| அத்தியாயம் XIII - | வேலைகள் வழங்கப்படுதல்களுக்கும் மற்றும் சேவைகள் வழங்கல்களுக்கும் பொருட் கொள்வனவு முறைகள் , களஞ்சியம் , பொருட்களைச் சரிபார்த்தல் , களஞ்சியப்படுத்தும் முறை , ஒப்பந்தங்கள் , பொருட்கொள்வனவு நடைமுறைகளில் இருந்து பிறழ்தல் ( நிதிப்பிரமாணங்கள் 708 - 775 ) |

08. தயவு செய்து இச்சுற்று நிருபத்தினை உங்கள் பிரிவில் /விசேட இயக்கத்தில்/நிறுவனத்தில்/திணைக்களத்தில் கடமைாற்றும் சகல பௌதிக சிகிச்சையாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கவும். இந்த விடயம் www.health.gov.lk வெப் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறிப்பு : இவ்வறிவித்தலில் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே பின்பற்றப்பட வேண்டும்.

எம் பீ எல் ரகுமான்.
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்காக..

M. B. L. Rahuman
Deputy Director General (Admin) II
Ministry of Health,
"Suwasiripaya",
Colombo 10.

| அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு |
|---|
| |

## மாதிரி விண்ணப்பப்படிவம்

### பௌதிக சிகிச்சையாளர் 11ஆம் வகுப்பு 'அ' பிரிவின் / தரம் II ன் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையும் , திணைக்களப் பரீட்சையும் - 2011

01. (அ) I விண்ணப்பதாரரின் பெயர் (தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்) ..........................................................................................

..........................................................................................

II விண்ணப்பதாரரின் பெயர் (ஆங்கில கபிடல் எழுத்தில் முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

III முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தமிழில்)

..........................................................................................

..........................................................................................

IV முதலெழுத்தக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள்( ஆங்கில கபிடல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) முதல்நியமனத் திகதி : ..........................................................................

(ii) சேவையில் நிரந்தரப்படுத்திய திகதியும் கடித இலக்கமும் : ..........................

(iii) தற்பொழுது பெறும் வருடாந்த வேதனம் : ..................................................

(iv) 11 'ஆ' பிரிவின் / தரம் III ற்கான வினைத்திறமை காண் மற்றும் திணைக்களப் பரீட்சை காண் தடைப்பரீட்சை தேர்ச்சியடைந்த திகதியும் வருடமும். :

..........................................................................................

(v) 'அ' பிரிவிற்கு / தரம் II ற்கு நியமிக்கப்பட்டிருப்பின் நியமிக்கப்பட்ட திகதி

..........................................................................................

02. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதரிபார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூண்டினுள் (✓) அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் (✗) குறியை இடவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விடயம் தொடர்பானது | ☐ | அலுவலக நிர்வாகம் தாபனவிதிக்கோவையும் | ☐ | நிதிப்பிரமானம் | ☐ |
| பிரயோகப்பரீட்சை | ☐ | வாய்மொழிப்பரீட்சையும் | ☐ | | |

03. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) ..............................................

04.. (அ). தற்பொழுது சேவையாற்றும் இடம்..........................................................................

(ஆ). அதற்குரிய மாவட்டம் ..........................................................................

(இ). பிரவேசப்பத்திரம் அனுப்புவதற்கான பிழையின்றித் தெளிவான முகவரி எழுதப்பட்ட 9"x4" அளவுள்ள ரூபா 30.00 , 5.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைfs; 02 விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(ஈ).1. அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) ..........................................................

..........................................................................................

11. அஞ்சல் முகவரி (ஆங்கில கபிடல் எழுத்தில்) ..........................................................

05. (அ). இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? ..........................................................

(ஆ). அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? ................

| |
|---|
| முத்திரைக் கூண்டு |

06. விண்ணப்பதாரரின் சான்றிதழ்

(1). இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப்பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும்/முதன் முறை அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் புரியப்படுவதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(11). சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பான நியதிச்சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

திருவாளர்/திருமதி/செல்வி ........................................................ இவ்வலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள **பௌதிக சிகிச்சையாளர்** உத்தியோகத்தர் என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும் இவ்வுத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக/முதன் முறையாக அல்லாதபடியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி சரியானவைகளெனவும் , எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................................

திகதி நிறுவனத் தலைவரின் கையொப்பம்

08. பன்முகப்படுத்தப்பட்ட/விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்

திருவாளர்/திருமதி/செல்வி ........................................................என்பவர் 11ஆம் வகுப்பின் 'அ' பிரிவின் **பௌதிக சிகிச்சையாளர்** சேவை உத்தியோகத்தராக எனது பிரிவில்/இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி சரியானவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு/அவளுக்குத் தகுதியுள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத்

தலைவரின் கையொப்பம்

திகதி (இறப்பர் முத்ததிரையிட வேண்டும்)